Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 174

செவ்வாய்க்கிழமை
19 மே 2026

வைகாசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வங்காள விரிகுடாவில் வளிமண்டல தளம்பல்

யாழ்ப்பாணம், மே 19
வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு இடையில் மீண்டும் ஒரு வளிமண்டல மேலடுக்குச் »11

## ஈழத்தமிழரின் நாளாந்த வாழ்விலும் பௌத்த பேரினவாத அடக்குமுறை

### முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 19
ஈழத்தமிழினத்தின் நாளாந்த வாழ்வில் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைகள் இன்றும் தொடர்கின்றன - இவ்வாறு இந்த வருடத்துக்கான முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அதில் மேலும் உள்ளதாவது:-
இன அழிப்பு முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு »11



இறுதிப்போரின் இனவழிப்பில்

## செங்நீரில் நனைந்த மண் கண்ணீரில் நேற்று நனைவு

யாழ்ப்பாணம், மே 19
தமிழினப் படுகொலையின் 17ஆவது அஞ்சலி நிகழ்வுகள் முள்ளிவாய்க்காலிலும், தமிழர் தாயகத்தின் இதர பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன. »11

## வெள்ளவத்தை நினைவேந்தலில் சிங்கள அமைப்புகளால் குழப்பம்

கொழும்பு, மே 19
கொழும்பு, வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் சிங்கள மேலாதிக்கச் செயற்பாட்டாளர்களால் குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது.
வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் »11

## முள்ளிவாய்க்கால் நினைவை இதயத்தில் ஏந்துவோம்

### தமிழக முதல்வர் விஜய் அஞ்சலி!



சென்னை, மே 19
ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகளில் கொல்லப்பட்ட உறவுகளுக்கு, தமிழக முதல்வர் விஜய் அஞ்சலி செலுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
முள்ளிவாய்க்கால் நினைவை இதயத்தில் »11



## இணுவில் பரராஜசேகரப் பிள்ளையாருக்கு இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், மே 19
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற »11

### குருக்கள்மடம் புதைகுழி

## எதிர்வரும் வெள்ளியன்று ஸ்கான் ஆய்வு அறிக்கை

மட்டக்களப்பு, மே 19
குருக்கள்மடம் மனிதப்புதைகுழி தொடர்பான ஸ்கான் அறிக்கையை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
1990ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் »1

### விசாரணைக்காக

## பொலிஸ்நிலையம் சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 19
விசாரணைக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற நபர், மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் - நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த ப.சுரேஸ்குமார் (வயது-41) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். »11



## விமலின் கொண்டாட்டத்தை தடுத்துநிறுத்தியது பொலிஸ்!

### பத்தரமுல்லயில் பதற்றம்

கொழும்பு, மே 19
போர்வெற்றியை முன்னிட்டு விமல் வீரவன்ஸ வால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட வெற்றிக் கொண்டாட்டத்தை பொலிஸார் தடுத்துநிறுத்தியதால் அந்தப் பகுதியில் பதற்றமான நிலை »11



பூச்சந்தி பூரான்

"நினைவேந்தலைக் குழப்பிறதையும் சிலர் மறக்காமல் நினைவில வைச்சிருக்கினம் கண்டியளோ"

## ஆளுநரின் விசாரணைக்கு எதிரான இடைக்காலத் தடைக்கட்டளை ரத்து

யாழ்ப்பாணம், மே 19
பருத்தித்துறை நகரசபை தவிசாளர் மற்றும் உறுப்பினர் ஒருவரால் வடக்கு மாகாண ஆளுநரின் விசாரணைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு எழுத்தாணை விண்ணப்ப வழக்குகளும் வடமாகாண மேல் நீதிமன்றத்தால் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டன.
பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநரால் முன்னெடுக்கப்பட »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4435 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 06 24 28 33 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1502 |
| வெற்றி இலக்கினம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 38 61 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0461 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 1 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2541 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 16 41 46 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6193 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 2 0 5 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2223 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 19 61 76 77 |
| விசேட எழுத்து | C |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 18.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0309 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 24 62 |

# சர்வதேச நிதிப் பரிமாற்றத்தின் கட்டமைப்புகள் பாதுகாப்பில்

கொழும்பு, மே.19

**சர்வதேச மற்றும் தேசிய நிதி கொடுக்கல் வாங்கலுக்கான கட்டமைப்புகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தொழில் அமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தால் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள சேவை வழங்குநருக்குச் செலுத்தப்பட்ட நிதி மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று இந்தியாவில் நிறுவனத்தின் நிதி முறைகேடு செய்யப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த இரு பரிவர்த்தனைச் செலுத்தலுக்கும் இலங்கை நிறுவனத்துக்கும் இடையில் நேரடித் தொடர்பு இல்லை. எனவே இந்த விவகாரத்தை எதிர்க்கட்சியினர் அரசியல் மயப்படுத்தத் தேவையில்லை-என்றார். (க-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 18.05.2026 | திங்கட்கிழமை | 0901 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 7 0 8 6 9 1 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 18.05.2026 | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3167 | N | 16 26 53 74 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 18.05.2026 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| C | 13 18 23 39 | 5328 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 18.05.2026 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0997 | 03 10 47 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 18.05.2026 | திங்கட்கிழமை |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 32 37 61 | 4879 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| | | திகதி | தினம் |
| | | 18.05.2026 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 36 | 19 26 37 48 | 2343 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 18.05.2026 | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 20 33 34 42 | 2993 |

# பணப்பரிமாற்றக் கட்டமைப்பில் கோளாறு; மக்கள் வங்கிக்கு ரூ.656 மில்லியன் இழப்பு

கொழும்பு, மே 19

பணப்பரிமாற்றக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாற்றால், சுமார் 656 மில்லியன் ரூபா நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் அந்தத் தவறு முழுமையாகக் கண்டறியப்பட்டு, சரிசெய்யப்பட்டுள்ளது என்று மக்கள் வங்கி அறிவித்துள்ளது. இது தொடர்பில் மக்கள் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த 2023 மே மாதம் முதல் 2026 மார்ச் வரையான காலப் பகுதியில் நாணய மாற்றுவீதத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக, குறிப்பிட்ட சில வாடிக்கையாளர்கள் தங்களுக்குரிய தொகைக்கும் அதிகமான பணத்தைப் பெற்றுள்ளனர். இந்தத் தவறு கண்டறியப்பட்டு உடனடியாக, முழுமையான உள்ளக மீளாய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கி உள்ளிட்ட ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை அதிகாரத் தரப்புகளின் ஆலோசனையின் கீழ் இவ்விடயம் தற்போது மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்பட்டுள்ள நிதியிழப்பை, வங்கி ஏற்கனவே அந்தந்தக் காலப்பகுதிக்கான தனது நிதி அறிக்கைகளில் முழுமையாக உள்வாங்கியுள்ளதுடன், மேலதிக நிதி இழப்பீடு எதுவும் இனி ஏற்படாது. தவறுதலாக அதிக பணத்தைப் பெற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து, அந்த இழப்பை மீட்கும் சட்டபூர்வ நடைமுறைகளை வங்கி ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. மக்கள் வங்கியின் ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாடு, இலாப மட்டம் அல்லது வாடிக்கையாளர்களின் வைப்புக்களின் பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. வங்கியின் அன்றாடச் செயற்பாடுகள் மற்றும் டிஜிற்றல் தளங்கள் எவ்வித தங்குதடையுமின்றி வழக்கம் போல் இயங்கி வருகின்றன-என்றுள்ளது. (க-இ)



## நீரில் மூழ்கி ஐவர் சாவு

கொழும்பு,மே.19

நாட்டில் ஒரு நாளில் மட்டும் நீரில் மூழ்கி ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கெக்கிராவ மற்றும் தெல்தெனியப் பகுதிகளில் நேற்று முன்தினம் 24 மணித்தியாலங்களில் இந்தச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கெக்கிராவ, சமகிகமப் பகுதியில் உள்ள கைவிடப்பட்ட ஏரி ஒன்றில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். அதேவேளை, தெல்தெனிய விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றவர்களில் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)



## எதிர்வரும் 28 ஈதுல் பெருநாள்

கொழும்பு,மே 19

புனித ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படும் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. நாட்டின் எப்பிரதேசத்திலும் துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதாரபூர்வமான தகவல் கிடைக்காமையால், துல் கஹ்தா மாதத்தை 30 ஆகப் பூரணப்படுத்தி, இன்று செவ்வாய்க்கிழமை துல்ஹஜ் மாதத்தின் முதலாம் நாள் ஆரம்பிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் துல்ஹஜ் மாதத்தின் 10ஆம் நாளான எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை புனித ஹஜ் பெருநாள் கொண்டாடப்படும் என்றும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. (க-இ)



## 540 சிகரெட்டுகளுடன் சீன நாட்டவர் கைது!

கொழும்பு, மே 19

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 540 வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் வெளிநாட்டவர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு தெற்கு பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, கொள்ளுப்பிட்டி, நிமல்கா கார்டன் பகுதியில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 35 வயதுடைய சீன நாட்டவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

## வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 19

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக சாட்சி விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கின் சாட்சியாளர்கள் எவரும் நீதிமன்றில் முன்னிலையாகாததால் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம் திகதிக்கு அழைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மத்திய கிழக்கு நிலைமையால்

# எரிபொருள் இறக்குமதிச் செலவு 4 மாதங்களில் உச்சம் தொட்டது

**கொழுமபு, மே 19**

**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள போர்ச்சூழல், இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. நடப்பு ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் இறக்குமதிச் செலவு மட்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடந்துள்ளது என்று உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.**

கடந்த ஆண்டு முழுவதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த எரிபொருள் இறக்குமதிச் செலவு 1.5 பில்லியன் அமெரிக்க டொலராக மட்டுமே காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலேயே இறக்குமதிச் செலவு ஒரு பில்லியன் டொலரை எட்டியுள்ளது.

மத்தியகிழக்கு நெருக்கடி மற்றும் தற்போதைய உலகளாவிய பொருளாதாரச்சூழலுக்கு மத்தியில், இலங்கையின் எதிர்காலப் பொருளாதார நிலைவரம் எவ்வாறு அமையும் என எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால்வீரசிங்க இந்தவிவரங்களை வெளியிட்டார். தற்போது குறிப்பிட்டுள்ள 1 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதிச்செலவு மட்டுமே ஆகும். ஏனைய இரண்டு தனியார் விநியோகஸ்தர்களின் இறக்குமதிச் செலவுகள் இதனுள் உள்ளடக்கப்படவில்லை. அவையும் சேர்க்கப்பட்டால் இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கும் என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார். மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் இந்த அசாதாரண போர்ச்சூழலானது அடுத்த மூன்று மாதங்களுக்குள் தணிந்துவிடும் அல்லது படிப்படியாக சீராகிவிடும் என்ற கணிப்பின் அடிப்படையிலேயே மத்திய வங்கி தற்போதைய பொருளாதார இலக்குகளையும் கணிப்புகளையும் தயாரித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

## மல்வானை வீட்டிலிருந்து வெளியேறிய மாணவர்கள்

கொழும்பு, மே 19

பஸில் ராஜபக்சவினுடையது என்று கூறப்படும் மல்வானை வீட்டில் தங்கியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிருந்து வெளியேற இணக்கம் தெரிவித்துள்ளனர். தொம்பே பிரதேச செயலகத்தின் பொறுப்பிலுள்ள அந்த வீட்டை பொதுமக்களின் பாவனைக்கு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியே கடந்த சில நாள்களாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அங்கு தங்கியருந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.


இந்தநிலையில், நேற்று பிரதமருக்கும், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் சசிந்து பெரேரா மல்வானை பகுதியில் அமைந்துள்ள காணி மற்றும் வீட்டை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதற்கு பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்தார். அதையடுத்து, மல்வானை காணியில் இருந்து வெளியேற நாங்கள் தீர்மானித்துள்ளோம் என்றும் கூறியுள்ளார். (எ-இ)

## சுற்றிவளைப்புகளில் 641 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 19

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில், 641 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 315 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 169 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 142 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 115 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிற போக்குவரத்துக் குற்றங்களுக்காக 4,185 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## போதைப்பொருள்களுடன் 1,039 சந்தேகநபர்கள் கைது



கொழும்பு, மே 19

நாட்டில் போதைப் பொருளைத்தடுக்கும் நோக்கிலான 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசிய திட்டத்தின்கீழ், ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ஆயிரத்து 39 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்று பொலிஸ்ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 6 பேரும் சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 5 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 440 கிராம் ஹெரோயின், 656 கிராம் ஐஸ், 797 கிராம் கஞ்சா, 44 ஆயிரத்து 832 கஞ்சாச் செடிகள், 22 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 993 போதைமாத்திரைகள், ஒரு கிலோ 205 கிராம் மதன மோதகம் மற்றும் ஒரு கிலோ 622 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனா. (எ-இ)

## காசில கண்டம்

மந்திரத்தில மாங்காய் விழுத்திறமாதிரி, காசையும் சிலர் விழுத்தத் தொடங்கிட்டினம். அதாலதான் திறைசேரியில அரசாங்கம் பொத்திப் பொத்தி வைச்சிருந்த காசெல்லாம், இப்ப மாயமா மறைஞ்சு கொண்டிருக்குது போல. முதல்ல நிதியமைச்சால அவுஸ்ரேலியாவுக்குக் கட்டவேண்டிய 2.5 மில்லியன் டொலர் காசு திறைசேரியில இருந்து மின்னாமல் முழங்காமல் காணாமப் போச்சுது. பிறகு இஞ்சத்தையான் போஸ்ட் ஒப்பிஸ் திணைக்களத்தில இருந்து அமெரிக்க அஞ்சல் துறைக்கு அனுப்பின 625,000 டொலர் காசையும் காணேலையாம். இவையள் 'நாங்கள் ஒன்லைனில அனுப்பிட்டோம்' எண்டுகினம். ஆனால் அமெரிக்காக்காரரோ 'எங்களுக்கு அப்பிடி ஒண்டுமேவரேலை' எண்டு கை விரிக்கினம். இவை அனுப்பினதுக்கும் ஆதாரம் இருக்கு அதை மாதிரி அமெரிக்காவுக்குப் போகேலை எண்டதுக்கும் ஆதாரம் இருக்காம். அப்ப இடைவழியில அதுவும் ஒன்லைனில அந்தக் காசை ஆர் ஆட்டையைப் போட்டிருப்பினம் எண்டு திசைகாட்டி அரசாங்கம் தலையைச் சொறிஞ்சுகொண்டு நிக்குதாம்.

இதெல்லாம் காணது எண்டு, போன ஏப்ரல் மாசம் சனத்துக்கு 'அஸ்வெசும' காசு குடுக்கேக்க, சிலருக்குக் கணக்குப்பிழையால ரெண்டு தரம் குடுத்துத் தள்ளிப்போட்டினமாம். இதால அரசாங்கத்துக்கு 248.7 மில்லியன் ரூபா பறந்திட்டுதாம். இப்ப அப்பிடி ஆருக்கெல்லாம் ரண்டுதரம் காசு போயிருக்கு எண்டு லிஸ்ட் ஒண்டு எடுக்கினமாம். அப்பிடி ரண்டுதரம் காசு குடுபட்டவைக்கு மே மாதம் காசு போடுப்படாது. அதால அஸ்வெசுமவால போன காசை எப்பிடியும் திரும்ப எடுத்துப்போடலாம். எண்டாலும் அந்தக் காசு இப்ப அரசாங்கத்தின்ர கையில இருந்திருந்தால் அதை வைச்சு ஏதும் உருப்படியான நல்ல திட்டங்களைச் செய்திருக்கலா மெல்லோ.

இப்பிடி அரசாங்கத்தின்ர காசையெல்லாம் நாசமாக்கிற பட்டியலில ஒரு வங்கியும் சேர்ந்திருக்காம். அந்த வங்கியின்ர வெளிநாட்டுக்காசு மாத்துற சிஸ்டத்து ஏதோ ஒரு குளறுபடியாம். இதால சில வாடிக்கையாளர்களுக்கு மூண்டு வருசமா, வெளிநாட்டுக் காசின்ர பெறுமதியை விட கூடுதலா பெறுமதியைக் கணிச்சு, காசு குடுத்திருக்கினம். அந்த வங்கியின்ர கொம்பியூட்டர் பிழையால இப்பிடி 656 மில்லியன் ரூபாவை குடுத்துத் தள்ளியிருக்கினம். ஒரு சினிமாப் படத்தில நடிகர் விவேக் தன்ர சாதகத்தைக் கொண்டுபோய்ச் சாத்திரியிட்ட காட்டேக்க, 'உனக்குத் தண்ணியில கண்டம' எண்டு சாத்திரி சொல்லுவார். அதுக்குப் பிறகு விவேக் கிணத்துக்குள்ள விழுந்து, மழையில நனைஞ்சு, கறண்ட் அடிச்சு ஆஸ்பத்திரியில கிடப்பார். அதே மாதிரித்தான், இப்ப திசை காட்டி அரசாங்கத்துக்கும் காசில ஏதோ கண்டம் போல.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# யாழ். மாவட்ட கடற்கரைக் கபடியில் இரு பிரதேச செயலகங்கள் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 19
யாழ். மாவட்டச் செயலகத்தின் விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட, கடற்கரைக் கபடிப்போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறைப் பிரதேச செயலகமும், பெண்கள் பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளன.
வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியை எதிர்த்து, தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி மோதியது.
இதில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 28:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 32:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (க-422-பி)

# குருபூசை விழா

யாழ்ப்பாணம், மே 19
சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவு பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது. அன்று நாயன்மார் குருபூசையும், திருநாவுக்கரச சுவாமிகள் குருபூசை விழாவும் நடைபெறும்.
சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆன்மிக விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி, சமூகமாமணி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார். திருநாவுக்கரச சுவாமிகள் குருபூஜையைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் செ.த.குமரனின் சொற்பொழிவும் இடம்பெறும்.
சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும். தொடர்ந்து ஆன்மிக விருந்தினர் உரையும் குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாரட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 19
சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், அருள்மொழி வாருதி, திருவாசகப்பிரியன் க.கயிலைவாசனின் 'இறையின்பத்தை உணர்வதற்கு வழிகாட்டும் திருமந்திரம்' எனும் பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும்.
சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், மே 19
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத்தொடரின் 53ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி.தயாநாதனின் தலைமையுரையும், சைவப்புலவர், திருவாசகப்பிரியன் ச.முகுந்தனின் 'இந்திரனருச்சனைப் படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# உதைபந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், மே 19
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழின் நாயகன் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.20 மணிக்கு ஐயனார் அணியை எதிர்த்து திருமகள் அணியும், மாலை 4.10 மணிக்கு சக்கோட்டை சென்.சேவியர் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை கலை ஒளி அணியும், மாலை 5 மணிக்கு சென்.சேவியர் அணியை எதிர்த்து திருக்குமரன் அணியும் மோதவுள்ளன. (எ-41-422)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பரபரப்பாகக் காணப்படுவீர்கள். எதிர்பார்க்கும் காரியம் சாதகமாகமுடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**கடகம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன்– மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைக் காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள். திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும்.

**தனுசு:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகளும் அதிகரிக்கும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# நினைவுகளைப் பாதுகாத்தல்


முள்ளிவாய்க்காலின் இறுதிப்பேரவலம் நிகழ்ந்து பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், ஈழத்தமிழினம் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான சர்வதேச நீதியைத் தேடி ஓயாது பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நெடும்பயணத்தில், ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அமைந்துள்ள கம்பர்லாண்ட் மாநகரசபைக்குச் சொந்தமான 'சிவிக்' பூங்காவில் 'தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி' உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட செய்தி, புலம்பெயர் தமிழர்களின் தளராத கூட்டு உழைப்புக்கும் நீதிக்கான தாகத்துக்கும் கிடைத்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அங்கீகாரமாகும். கனடாவின் பிரம்டன் நகரைத் தொடர்ந்து, இப்போது ஆஸ்திரேலியாவின் பொது நிலப்பரப்பிலும் தமிழர்களின் வரலாற்றுப் பேரவலத்தின் சாட்சியாக இந்த நினைவுத்தூபி நிமிர்ந்து நிற்பது, ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு என்பது காலத்தால் மறைக்கப்பட முடியாத உலகளாவிய உண்மை என்பதை மீளவும் உரக்கச் சொல்லியிருக்கின்றது.

இந்த நினைவுத்தூபி என்பது வெறும் கல்லும் மண்ணும் கலந்த ஒரு சிலையல்ல; அது காலனித்துவ நீக்கத்தின் குறைபாடுகளால் தொடங்கி, கடந்த 78 ஆண்டுகளுக்கும் மேலாகத் தாயகத்தில் தமிழ்மக்கள் எதிர்கொண்ட முறையான ஆக்கிரமிப்புகள், இடப்பெயர்வுகள் மற்றும் படுகொலைகளின் சாட்சியமாகும். குறிப்பாக, ஆஸ்திரேலியாவின் கடுமையான உள்ளூர்ச்சட்டங்களுக்கு உட்பட்டு, ஏறத்தாழ ஒரு தசாப்தகால நீண்ட சட்டப் போராட்டங்களின் மத்தியில் 'தமிழீழம்' என்ற வரலாற்றுப் பெயருடன் இந்த நினைவுப்பலகை அங்கு நிறுவப்பட்டிருப்பது, தமிழர்களின் தன்னாட்சி உரிமையையும் அடையாளத்தையும் சர்வதேச மட்டத்தில் நிரந்தரப்படுத்துகின்றது. தாயகத்தில் நினைவுத்தூபிகள் இடிக்கப்பட்டு, நினைவேந்தல் உரிமைகள் மறுக்கப்படும் ஒரு அடக்குமுறைச் சூழலில், புலம்பெயர் தேசங்களின் பொதுப் பூங்காக்களில் இத்தகைய நினைவிடங்கள் தோன்றுவது, ஈழத் தமிழர்களின் கடந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பாலமாக அமைந்து நீதிக்கான குரலை உலக அரங்கில் மேலும் வலுப்படுத்தும்.

இந்த நினைவுச்சின்னத்தின் உச்சியில் பொறிக்கப்பட்டுள்ள கார்த்திகைப்பூ, தமிழர்களின் உன்னதமான தியாகத்தினதும் மீளெழுச்சியினதும் குறியீடாகும். தாயகத்தை விட்டு வெகுதொலைவில் வளரும் இளைய தலைமுறையினர், தங்களை உருவாக்கிய வரலாற்றையும், தங்களின் அடையாளத்தின் பின்னாலுள்ள பெருமைகளையும், வலிகளையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு திறந்தவெளிப் பல்கலைக்கழகமாகவே இவ்விடம் திகழ்கின்றது. அநீதி இழைத்தவர்களையோ, அதன் சூத்திரதாரிகளையோ காலம் கடந்தாலும் எமது நினைவுகள் மன்னிக்கப் போவதில்லை என்பதையும், பிழைத்திருத்தல் மற்றும் இடப்பெயர்வுகளுக்கு மத்தியிலும் தமிழ்ச் சமூகம் தனது வேர்களை ஒருபோதும் மறந்துவிடாது என்பதையும் ஒட்டுமொத்த ஆஸ்திரேலிய சமூகத்திற்கு மட்டுமல்லாது முழு உலகுக்குமே இது உணர்த்துகின்றது. அரசியல் அழுத்தங்களோ, அச்சுறுத்தல்களோ நீதிக்கான இந்த அறப்போராட்டத்தை முடக்கிவிடமுடியாது என்பதை இந்தத்தூபி நிரூபித்துள்ளது.

நினைவுகளைப் பாதுகாக்கும் எந்தவொரு தேசமும் வரலாற்றில் தோற்றுப்போனதாகச் சரித்திரமே இல்லை. முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் சிட்னி நகரில் எழுந்துள்ள இந்த நினைவுத்தூபி, உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கு ஒரு புதிய வழிகாட்டியாகும். மாநகரசபைகளின் எல்லைகள் மற்றும் நில ஒதுக்கீடுகளின் அளவுகளைக் கடந்து, எஞ்சியிருக்கும் அனைத்துப் புலம்பெயர் நாடுகளிலும் இத்தகைய நினைவுச் சின்னங்களை நிறுவுவது காலத்தின் அவசியமாகும். அநீதிக்கு எதிரான கூட்டு நினைவுகூருதலை ஆயுதமாகக் கொண்டு, அடுத்தடுத்த சந்ததிகளின் ஆன்மாவில் இனவழிப்பு வரலாற்றைக் கடத்துவதன் மூலமே நாம் ஈழ மண்ணின் விடிவிற்கான தார்மீகப் பொறுப்பை நிறைவேற்றமுடியும். இந்த நினைவுத்தூபியின் நிழல், தமிழர்களின் நீதிக்கான சர்வதேசப் போராட்டத்திற்கு என்றும் அழியாத ஒளியைத் தருமென்பது திண்ணம்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## பொய்யாமொழி

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

**பொருள்:** நடுவுநிலையாக நின்று அறநெறியில் நிலைத்து வாழ்கின்றவன் அடைந்த வறுமை நிலையைக் கேடு என்று கொள்ளாது உலகம்.




# மத்தள விமானநிலையத்தை குத்தகைக்கு வழங்கத்திட்டம்

கொழும்பு, மே 19

**சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள, ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகிலுள்ள மத்தள விமானநிலையத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க இலங்கை முடிவு செய்துள்ளது என்றும், இந்த விடயத்தை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இலங்கையின் இந்த முடிவானது. இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் மூலோபாய ரீதியான நிலப்பரப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முனையும் இந்திய நிறுவனங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு அரிய வாய்ப்பாக அமையலாம் என்றும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்த விமானநிலையம் 2013ஆம் ஆண்டு சீன எக்ஸிம் வங்கியிடமிருந்து 209 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெற்று பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த விமானநிலையம் போதிய பயணிகள் போக்குவரத்து மற்றும் சர்வதேச விமான நிறுவனங்களின் பங்களிப்பு இல்லாததால், பல ஆண்டுகளாகப் பயன்பாடின்றி உள்ளது. உலகின் மிகவும் வெறிச்சோடிய வானூர்தி நிலையம் என்ற பெயரையும் அது பெற்றுள்ளது. பெரும் நட்டத்தைச் சந்தித்து வரும் இந்த வானூர்தி நிலையத்தை நவீன விமானப் போக்குவரத்து மையமாக மாற்றியமைக்கவும், அதன் வர்த்தகமதிப்பை உயர்த்தவும் தகுதியான மூலோபாய முதலீட்டாளர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதிக்குள் தங்களின் விருப்பப் பிரகடனங்களை சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசு அறிவித்துள்ளது. இந்த ஒப்பந்தமானது கட்டியெழுப்பல்இயக்கல் பரிமாற்ற மாதிரியின் கீழ் 30 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இந்த மத்தள விமானநிலைய முதலீட்டு வாய்ப்பை இந்தியா மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)




# கியூ.ஆர். முறைமை கட்டாயம்

கொழும்பு, மே 19

கியூ.ஆர். குறியீட்டு முறைமையைப் பின்பற்றாத எரிபொருள் நிரப்புநிலையங்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப் படுத்தப்படும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விநியோகத்துக்கு கியூ.ஆர். குறியீட்டு முறை கட்டாயமானது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக இயக்குநர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார். (எ-இ)




# தப்பியோடியவர் மீது துப்பாக்கிச்சூடு

அம்பாறை, மே 19

சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்ய முயன்ற போது, அவர் தப்பிக்க முயன்றதால் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. சம்பவத்தில் பொலிஸாரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன் இந்தச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அம்பாறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

வெளிவிவகார அமைச்சின்

# ஆவண சான்றளிப்பு சேவைகள் நிறுத்தம்

இலங்கை வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரங்கள் பிரிவின் அனைத்து ஆவண அத்தாட்சிப்படுத்தல் சேவைகளும் மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மின்னணு ஆவண அத்தாட்சிப்படுத்தல் அமைப்பில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத தொழில்நுட்பப் பிரச்சினை காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக சேவை இடைநிறுத்தம், பத்தரமுல்லையில் உள்ள தூதரக விவகாரங்கள் பிரிவின் முதன்மை அலுவலகத்துக்கும், யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து பிராந்திய தூதரக அலுவலகங்களுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

நாளை

புதன்கிழமை- வைகாசி 6

20.05.2026

சுபநேரம் : 04.22 – 05.52

ராகுகாலம் : 11.52 – 01.22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த விசேட டிஜிற்றல் விளம்பரத்திட்டம்

**கொழும்பு, மே 19**

**இலங்கையின் சுற்றுலாத்துறையை சர்வதேச ரீதியில் மேம்படுத்துவதற்கான விசேட டிஜிற்றல் ஊக்குவிப்பு விளம்பரத் திட்டமொன்று எதிர்வரும் சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முதற்கட்டமாக இந்தியா சீனா இங்கிலாந்து, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளை இலக்குவைத்து இந்த டிஜிற்றல் சுற்றுலா ஊக்குவிப்பு விளம்பரத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக சுமார் ஒரு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் குறுகிய காலத்துக்குள் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் சுமார் 5 பில்லியன் ரூபா செலவில் பல வருடங்களுக்கு நீடிக்கக்கூடிய வகையில் தேசிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டமொன்றை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலா அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய சர்வதேச நிதி நிறுவனங்கள் இந்தத் துறையைச் சார்ந்த அனைத்து முதலீடுகளை தற்போது மேற்கொண்டு வருகின்றன- என்றார். (எ-இ)



நீர்வேலி மனோன்மணி அம்பிகை சமேத சிவபூர நாதேஸ்வரர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (க-17-சி)

## வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம்

முல்லைத்தீவு, மே 19

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய 2026ஆம் ஆண்டுக்கான வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுத்தல் நிகழ்வும், 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகளும் நடைபெறும். எதிர்வரும் ஜூன் மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-66)

## பரண் விழுந்து சிறுவன் சாவு

கம்பளை, மே 19

வீட்டுக்குள் பொருள்களை வைக்க பயன்பட்ட பரண் சரிந்து விழுந்ததில் 3 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கம்பளை அட்டுவாவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. நீர்க்குழாய் எடுப்பதற்காக தந்தை ஏறிய போது, பரண் கீழே சரிந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் மீது விழுந்துள்ளது. படுகாயமடைந்த சிறுவன், கம்பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். (க-இ)



யாழ். மாவட்டச் செயலர் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில், தென்மராட்சி பிரதேச செயலக அணி இவ்வருட சம்பியனாகியது. (க-9-சி)



# தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வரவுபிலவுக்குளத்தை விடுவிக்குக!

*ரவிகரன் எம்.பி கோரிக்கை*

முல்லைத்தீவு, மே 19

தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட வரபுபிலவுக் குளத்தை உடன் விடுவிப்பதுடன், குளத்தைச் சீரமைத்து, விவசாயிகளிடம் கையளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வரவுபிலவுக் குளத்தின் 20 ஏக்கர் வரையான நீரேந்துப் பகுதியை தனிநபர் ஒருவர் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து நெற்பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருகின்றார். இது தொடர்பில் வரவுபிலவுக் குளத்தின்கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் ஏனைய விவசாயிகள் என்னிடம் முறையிட்டுள்ளனர். வரவுபிலவுக் குளத்தின் கீழ் 68 ஏக்கரில் 15 விவசாயிகள் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குளத்தின் நீரேந்துப் பகுதி தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால், அந்தக் குளம் சீரமைக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளது. இதனால் ஏனைய விவசாயிகள் மானாவாரியாக பெரும்போக நெற்செய்கையை மாத்திரமே மேற்கொண்டு வருகின்றனர்.

குளம் சீரமைக்கப்பட்டால் அப்பகுதி விவசாயிகளால் சிறுபோக நெற்செய்கையையும் மேற்கொள்ளமுடியும்-என்றார். இதற்குப் பதிலளித்த ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், வரவுபிலவுக் குளம் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நில அளவைத் திணைக்களத்தின் ஆய்வறிக்கையில் அந்தப்பகுதியில் குளங்கள் எவையும் இல்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே குளத்துக்கான நில அளவைத் திணைக்கள வரைபடம் இல்லாமையால், சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள தனிநபருக்கு எதிராக வழக்குத் தொடரமுடியாத நிலையுள்ளது-என்றார்.

இதற்குப் பதிலளித்த நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர், அந்தப் பகுதிக்குரிய நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டு வரைபடங்கள் எவையும் இல்லை. அந்தப் பகுதி வனவளத்திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதியாகவுள்ளது-என்றார். கடந்த காலங்களில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் குளங்களை மூடி இராணுவ முகாம்கள் அமைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக் காட்டினார். ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு அமைவாக, கமநலசேவைத் திணைக்களம் குளத்தை எல்லைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (க-246)

# வலயமட்டப் போட்டிகளில் யூனியன் கல்லூரி சாதனை!

யாழ்ப்பாணம், மே 19

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் மிகச்சிறந்த வெற்றிகளை வெளிப்படுத்தியுள்ளனர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற போட்டிகளில், 6 மாணவர்கள் முதலிடமும், 9 மாணவர்கள் இரண்டாமிடமும், 3 மாணவர்கள் மூன்றாமிடமும், 16 வயது பெண்களுக்கான அஞ்சல் ஓட்டப் பேட்டியிலும் வெற்றி பெற்றனர். மாணவர்கள் 18 இடங்களைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
**பதிவுத்திகதி 1971.01.09 பதிவு இல - V/ 260**

## பதவி வெற்றிடம் வெளிவாரி நியமனம்

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆண், பெண்) இருபாலாரும்

01 ) பதவி :- **உள்ளகக்கணக்காய்வாளர் வெற்றிடம் -01**
:- **பதவி, சம்பள குறியீட்டு இல - 105/09**
:- **2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம்**
:- **35200-640 x10 - 700x10-860x10-57200**

**கல்வித்தகைமைகள் :-**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலைப்பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை / மேற்பார்வை நிலைப் பதவியில் / நிறைவேற்றாளர் நிலைப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி. **அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த.உயர் தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது. 04 ஆண்டு கால அனுபவம்.

02) பதவி :- கிளை முகாமையாளர் - வெற்றிடம் - 03
:- பதவி, சம்பள குறியீட்டு இல : 208/ 11
:- 2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம
:- 34280-580x10-640x10-800x10-54480

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் **ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./**

கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் **ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./ அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம். / க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் **ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.**

03) பதவி :- வெளிக்கள உத்தியோகத்தர் - வெற்றிடம் 02
:- பதவி. சம்பள குறியீட்டு இல - 210 / 12
:- **2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம்**
:- 33820-550x10-610x10-770x10-53120

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் / எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

ஆ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் / எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./ **அல்லது**

கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த உயர்தரப் பத்திர பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத சிங்களம்/ தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

04) பதவி :- **விற்பனை உதவியாளர்- வெற்றிடம் - 04**
:- **பதவி.சம்பள குறியீட்டு இல -308/ 15**
:- **2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம்**
:- **32435-460-10-520x10-680x10-49035**

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர்/ எரிபொருள் நிரப்புனர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 அண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி. கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

05. பதவி - **விற்பனை உதவியாளர்- வெற்றிடம் - 06**
: - **பதவி.சம்பள குறியீட்டு இல்- 308/17**
: - **2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம்**
: - **31515-360x10-450x10-500x10-44615**

அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08ந் தர கல்விச் சான்றிதழ்.

06) பதவி - : சாரதி - வெற்றிடம் -03
:- **பதவி. சம்பள குறியீட்டு இல. 312/ 13**
:- **2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம்**
:- 33360-520x10-580x10-740x10-51760

**தகைமைகள் :-**

அ) 05ம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து / லொறி/ பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால் அனுபவம்.
தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று தலைவர் வ.ப.நோ.கூ சங்கம். வவுனியா என்ற முகவரிக்கு நேரடியாகவோ/பதிவுத்தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

07) பதவி : - **எரிபொருள் நிரப்புனர்- வெற்றிடம் - 04**
: - **பதவி.சம்பள குறியீட்டு இல -313/16**
: - 2025 சம்பள மீளாய்வு படி சம்பள அளவுத்திட்டம்
: - **31975-390x10-490x10-650x10-47275**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது. 01 ஆண்டு கால அனுபவம். **அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/ 08ம் தர கல்விச் சான்றிதழ்.

(01) வயதெல்லை :- 18-45 இற்கு உட்பட்டிருத்தல்.
02) விண்ணப்ப முடிவுத்திகதி :- 10.06.2026
(03) குறிப்பு
கூட்டுறவு சங்கங்களின் நிரந்தர பணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் (கூட்டுறவு பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல)

விண்ணப்பிக்கும் பதவி, முழுப்பெயர், நிரந்தர, முகவரி, தற்போதைய வசிப்பிட முகவரி, அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, வயது, பால், கல்வித்தகைமை, தொழிற்தகைமை, சேவைத்தகைமை ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பபடிவத்தினை தாங்களே தயாரித்து., கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவினை குறிப்பிட்டு **"தலைவர், வவுனியா பல நோக்கு கூட்டுறவு சங்கம், குட்செட் வீதி, வவுனியா** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் முலம் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்.**
வவுனியா பல நோக்கு கூட்டுறவு சங்கம்,
குட்செட் வீதி, வவுனியா.

**திகதி : 19.05.2026**

(எ)(N-1)



# நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருவிழா முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 19

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத் திருமணமண்டபத்தில் இடம்பெற்றது.

வேலணைப் பிரதேச செயலாளர் த.அகிலன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலயத்தின் பெருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை தெப்போற்சவத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-41-66)

## யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யா/ புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்.**
**யா/ புனித அந்தோனியார் கல்லூரி**
**ஊர்காவற்றுறை**

(S61469) J-1

# மரண அறிவித்தல்



## மகேந்திரராஜா கணேசானந்தி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரராஜா கணேசானந்தி அவர்கள் நேற்று (18.05.2026) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சாந்தலிங்கம் - புனிதவதி தம்பதியரின் அன்பு மகளும், நல்லையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், மகேந்திரராஜாவின் அன்பு மனைவியும், பிரதீபன், நிந்துஜன், அனுஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரி, சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும், கபிஸ்கா, அபிசன் ஆகியோரின் பேர்த்தியும், கணேஸ்வரி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி, சாந்தி, குகானந்தி, கிருஷ்ணவதனி, சீவமாலா ஆகியோரின் சகோதரியும், தெய்வேந்திரராஜா, சற்குணராசா, ஸ்ரீஸ்கந்தராசா, ஜெயராணி, பசுபதிராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ம் மைல், மருதடி வீதி,
டச்சு வீதி, சாவகச்சேரி.


**தகவல்:- குடும்பத்தினர்**
**076 652 6146 (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதிகோரி பிரிட்டனில் நேற்றுப் போராட்டங்களும், பேரணிகளும் இடம்பெற்றன. அத்துடன் இறுதிப்போரில் உயிரிழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன (ம)



வட்டுக்கோட்டை, பொன்னாலையில் நேற்றுமன் தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப் பட்டது. இனப்படுகொலை நினைவுச் சின்னம் முன்பாக ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது. (எ-27)





முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான நேற்று வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. மூதூர் கிழக்கு கடற்கரைச் சேனையில் மக்களின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிரிழந்தவர்களுக்காக தீபச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பறிமாறப் பட்டது. (எ-இ)








முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான நேற்று வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன. முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் நேற்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி பிராத்தனையும் மேற்கொள்ளப் பட்டது. (எ-இ)

கிளிநொச்சி மாவட்ட வாடகை வாகன உரிமையாளர் சங்கத்தின் ஏற்பட்டில் கிளிநொச்சி டிப்போ சந்தியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (எ-113)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இரண்டாம் தளபதி கொலை

வொஷிங்டன், மே 19

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இரண்டாம் நிலைத் தளபதி அபுபிலால் அல்மினுகி அமெரிக்கப் படைகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஈராக் மற்றும் சிரியாவைக் கைப்பற்றி அங்கு இஸ்லாமிய அரசாங்கத்தை அமைக்கும் நோக்குடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புச் செயற்பட்டு வந்தது. அந்த நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளநிலையில், அவர்கள் அங்கிருந்து வெளியேறி நைஜீரியா, சூடான் போன்ற ஆபிரிக்கா நாடுகளில் தற்போது வேரூன்றிவருகின்றனர். இவ்வாறான பின்னணியிலேயே, ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிரதான செயற்பாட்டாளராக உள்ள அபுபிலால் அல்மினுகி அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். அவர் கொல்லப்பட்டதை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உறுதிப்படுத்தியுள்ளார். அபுபிலால் அல்மினுகியை கடந்த 2023ஆம் ஆண்டு உலகப் பயங்கரவாதியாக அமெரிக்கா அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## மரண அறிவித்தல்



**தோற்றம்: 02.04.1946** **மறைவு: 16.05.2026**

### வேலுப்பிள்ளை தியாகராஜா

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் இல.44 கனகரட்ணம் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகராஜா கடந்த 16.05.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மருமகனும், பூரணம் (மேனாள் முன்பள்ளி ஆசிரியர்-புங்குடுதீவு) அவர்களின் பாசமிகு கணவரும், கௌரிசங்கர் (UK), இளநங்கை (UK), அருள்நங்கை (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், துஷ்யந்தினி (UK), நந்தகுமார் (UK), கேதீஸ்வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்தனா (UK), அனன்யா (UK), தெய்வீகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2026) செவ்வாய்க் கிழமை அரியாலையில் அமைந்துள்ள இல்லத்தில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.44 கனகரட்ணம் வீதி, அரியாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 31822) A



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 09 . 1974

மறைவு 18 . 05 . 2026

### தர்மலிங்கம் தவலிங்கம்

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தவலிங்கம் அவர்கள் நேற்று (18.05.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பார்வதி தம்பதியரின் இளைய மகனும், அமரர் இரத்தினதுரை அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், வனிதாவின் அன்புக் கணவரும், கார்த்திகன், ரிஜானா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரவணபவானந்தன் பரமேஸ்வரி, அமரர் சிவரத்தினம் தங்கராணி, காலஞ்சென்றவர்களான யோகராணி, பாலசுப்பிரமணியம், அமரர் பவானந்தன் யோகமலர், தேவராசா உலகேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரி கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனிதா இந்திரன், ஜெனிதா குமணன் மற்றும் வினிதா மதனகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்வேலி சிவியாகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 871 3118**
**077 646 2443**

(CS 31823)A



## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 03 . 1937



மறைவு 18 . 05 . 2026

### வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

**(ஓய்வுபெற்ற முதன்மை செயலாளர் கல்வி இராஜாங்க அமைச்சு பத்தரமுல்ல, கொழும்பு)**

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (18.05.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னதங்கம் தம்பதியாரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - இராசாம்பாள் தம்பதியாரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தெய்வயானைப்பிள்ளை, இராசலட்சுமி, தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவபாலன், ஆனந்த மனோகரி, இராஜேஸ்வரி, சிவனேஸ்வரி, சாரதா தேவி மற்றும் கமலா தேவியின் அன்பு மைத்துனரும், நாகவதனி, தர்மினி, தினேஸ், சுதர்சினி, வர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாருபன், கருணை வேல், சியமளா, இந்திரஜித், நிமால் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார், பவிஷாந்த்,சுடர்ஜினி, துலக்ஷா, கம்சகி, நதாங்கி, நிஷாந், கஷ்னிகா,அவினாஷ், பாமேஷ் டக்டஷா ஶ்ரீக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (19.05.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**இல 15, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**
**077 606 3397**

(CS/31821) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் மக்களுடன் தமக்கு பிரச்சினை இல்லையாம்

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு


புலிகளுடனேயே எமக்குப் பிரச்சினை இருந்தது. தமிழ் மக்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டுவருகின்றோம். எமக்கு தமிழ் உறவினர் களும் உள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் போர் முடிவடைந்திருந்தா லும், போரை முடிவுக்குக் கொண்டுவந்த தலைவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற பிரிவினைவாதச் சிந்தாந்தம் இன்னும் தோற்கடிக்கப் படவில்லை.

போர் நிறைவுக்கு வந்த நாளை நாம் நினைவுகூர்ந்தாலும் இதற்குப் பங்களிப்புச் செய்த படையினர் சிறையில் உள்ளனர். புலி ஆதரவாளர்களின் தேவையை நிறைவேற்றுவதற் காகவே இவ்வாறான நடவடிக்கை இடம்பெறுகின்றது. புலனாய்வுப் பிரிவு பிரதானிகூட சிறையில் உள்ளார். ஆனால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான கோப்புகளை ஒளித்தவர்களுக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது. இதுதான் ஜே.வி.பி. அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலாகும். நாம் தமிழர்களுடன் போரிடவில்லை என்பதை புலி ஆதரவு தமிழ் டயஸ்போராக்கள் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களுடன் நாம் ஒத்துழைப்புடன்செயற்பட்டு வருகின்றோம். சகோதரத்துடன் பழகுகின்றோம். புலிகள் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்புடன் எமக்கு பிரச்சினை இருந்தது. அவ்வமைப்புக்கு எதிராகவே நாம் போர் செய்தோம்- என்றார். (எ-44)

# சென்னையை தோற்கடித்து ஹைதராபாத் முன்னேற்றம்

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னையை வீழ்த்தி பிளேஆப் வாய்ப்பை உறுதிப்படுத்தியது ஹைதராபாத்.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னைஅணிமுதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக பிரேவிஸ் 44 ஓட்டங்களையும், கார்திக் சர்மா 32 ஓட்டங்களையும், சாம்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணி இஷான் கிஷானின் பொறுப்பான ஆட்டத்தால் 19 ஓவர்களில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. இஷான் கிஷான் 70 ஓட்டங்களையும், கிளாசன் 47 ஓட்டங்களைபும் பெற்றனர். இந்த வெற்றியின்மூலம் ஹைதராபாத் அணி பிளேஆப் செல்வது உறுதியாகியுள்ளது. அதேநேரம், சென்னை அணி வெளியேற்றப்படும் நிலையில் உள்ளது. (ம)

## எதிர்வரும்...

கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள் மடம் பகுதியில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு விசாரணைகளும், அகழ்வு நடவடிக்கைகளும் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில், சம்பவம் இடம்பெற்றதாகக் கருதப்படும் பகுதியில் கடந்த 15, 16, 17ஆம் திகதிகளில் ஸ்கான் ஆய்வுகள் இடம்பெற்றன. அந்த அறிக்கையையே எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (அ-ம-50)

# முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு நீதிகோரி லண்டனில் போராட்டம்




முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலைக்கு நீதிகேட்டு, ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக்கோரி லண்டனில் உள்ள தமிழர்கள் திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு இலங்கை அரசாங்கமே காரணம் என்றும் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம் என்றும் வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பேரணியில் கலந்துகொண்ட தமிழர்கள் பிரித்தானிய பிரதமரின் இல்லமான இல.10, டவுனிங் வீதியை நோக்கி பேரணியாக சென்றனர்.

தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராகவும், இராணுவ மயமாக்கல் முடிவுக்கு கொண்டு வருமாறு கோசங்களை எழுப்பி போராடியிருந்தனர். இதில் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


# நீங்கா நினைவில் எட்டு ஆண்டுகள்

மண் மகிழ 30 . 10 . 1985



மண் நெகிழ 18 . 05 . 2018

**அமரர் கோபாலபிள்ளை குகன்**
**(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - அதி சிறப்புத் தரம்)**
**திதி: திருதியை (19.05.2026)**

இறைவன் அமைத்து தந்த அழகிய கூட்டிலே
பல்லாண்டு காலம் வாழ்ந்திட
பாரினிலே வந்துதித்த பாசமலரே !
அன்று மே பதினெட்டு - வானத்தில்
மேகக் கண்கள் பனித்திருந்தன
அவ்வேளை எதை உணர்ந்தாய்..!
என்ன நினைத்தாய் உந்தன்
அன்னையிடம் உன்மனம் பேசியதே
"வானமும் பூமியும் அழுகிறதம்மா" என்றாயே
ஏனடா! நாம் பூமியிலே உனையிழந்து
காலமெல்லாம் கண்ணீரில்
கரையப் போவதை அறிந்தாயோ? அன்று
காற்றோடு கலந்து காதோரம் வந்த செய்தி
நேற்றுப்போல் உள்ளதடா
கலைந்துபோன உன் கனவுகள்
கடந்து சென்ற காலத்தின்
அழியாத நினைவுகள் என்றும் அழியாது.
எம் அனைத்து வலிகளுக்கும் - நீ
அருமருந்தாக இருந்தாய் - இன்று
உனை இழந்து தவிக்கும்
ஆறாத துயருக்கு ஏது மருந்து?
ஆறாது என்றும் எம் மனக் காயங்கள்

[illegible] வீதி,
வேலணை மேற்கு, வேலணை - 08.
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

உந்தன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

AJA/CS/2026/0061462


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## செந்நீரில்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் காலை 10.15 மணியளவில் ஆரம்பமாகின. முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவர் தவத்திரு அகத்தியர் அடிகளால் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து காலை 10.29 மணியளவில் மணி ஒலிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இரண்டு நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் போரில் தனது உறவுகளைப் பறிகொடுத்த முல்லைத்தீவு வற்றாப்பளையைச் சேர்ந்த சிறீரஞ்சன் ரினோசா என்பவரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அஞ்சலியில் கலந்துகொண்டவர்களுக்கு, இனப்படுகொலையில் கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பெருந்திரளான பொதுமக்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (அ-ம-113-110)

## வங்காள...

சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

தென்மேற்குப் பருவக்காற்றின் உடைவு இலங்கையின் நிலப் பகுதிகளில் இன்று முதல் நிகழும். இந்த வருடத் தென்மேற்குப் பருவக்காற்று மழை இலங்கையின் சராசரியை அண்மித்ததாகவே கிடைக்கும் வாய்ப்புள்ளது. சிலவேளைகளில் சராசரியை விட 5 தொடக்கம் 10 வீதம் குறைவாகவும் அமையலாம். மாதங்களின் அடிப்படையில் ஜூன், ஜூலை மாதங்கள் சராசரியை விடச் சற்றுக் கூடுதலான அளவில் மழையைப் பெறும் வாய்ப்புள்ளது. ஆனால், ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்கள் சராசரியை விடக் குறைவான அளவு மழைவீழ்ச்சியைப் பெறும் வாய்ப்புள்ளது. ஜூலை மாதத்தின் பிற்பகுதியிலிருந்து எல்நினோ நேர் நிலைக்கு வரும் வாய்ப்புள்ளது. எல்நினோ என்பது தனித்து வரட்சியை மட்டுமல்ல எதிர்பாராத வளிமண்டலக் குழப்பங்களுடன் தொடர்புடையதாக மிக்செறிவான மழைவீழ்ச்சியுடன் கூடிய வெள்ள அனர்த்தங்களையும் உருவாக்க வல்லது - என்றுள்ளது. (அ-ம-66)

## ஈழத்தமிழரின்...

இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றது. தமிழின அழிப்பு செயல்முறை ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. பேரரசு கட்டமைப்பின் புவிசார் நலன்களுக்காகவும் சிங்கள பௌத்த பேரினவாத ஏகாதிபத்தியத்தை தக்க வைப்பதற்காகவும் தமிழின அரசியல் வேணவாவை அதன் ஆயுத பரிமாணத்தை இனப்படுகொலையூடாக முடிவுக்குக் கொண்டு வந்ததன் மாயையை முள்ளிவாய்க்காலில் நிகழும் தமிழினப் படுகொலை நினைவுகூரல் தகர்த்து எறிகின்றது.

17 ஆண்டுகள் கடந்தும் இம்மண்ணிலே கொத்துக்கொத்தாய் கொல்லப்பட்ட இரத்த சொந்தங்களுக்கு நினைவு நடுகற்கள் இன்றி ஆகாயமே எல்லையாக அவர்களின் கனவுகளை சுமந்து வரும் காற்றே சாட்சியாக, ரத்தம் தோய்ந்த மண்ணில் தேசத்திற்கான கனவுகளை சுமந்து, அடக்குமுறையை எதிர்த்து, விடுதலைப் பயணத்தைத் தொடர ஒரு தேசமாக முள்ளிவாய்க்கால் திடலில் ஒன்று கூடியுள்ளோம். எமது அரசியல் கோரிக்கைகள் நியாயமானவை, அறத்தாற்பரியம் கொண்டவை. இவை இன்னொரு குழுமத்தின் இருப்பை அச்சத்துக்கு உள்ளாக்கவில்லை என்பதை மீள வலியுறுத்துகின்றோம்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழினத் தேசம் என்றும் இல்லாதவாறு சிங்கள பௌத்த தேசிய பேரினவாதத்தால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அடக்குமுறையின் பல்வேறு வடிவங்கள் நாளாந்த வாழ்வியலாக சாதாரண மயப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசத்தின் நிலம் தொடர் அபகரிப்புக்கு உட்பட்டுள்ளது. இராணுவ மயமாக்கத்தின் செறிவு அதிகரித்துள்ளது. ஈழத் தமிழரின் தேசிய அடையாளங்கள் இல்லாமல் ஆக்கப்படுகின்றன. வளரும் தலைமுறையை அடிமைப்படுத்துவதின் ஊடாக தமிழின எழுச்சியை தொடர்ந்து தடுப்பதற்கான முயற்சிகளை ஏற்கனவே சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது.

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஈழத் தமிழர் உறவுகளே!

ரத்தம் தோய்ந்த இந்த மண்ணிலிருந்து போராட கனத்த காற்று சுமந்து வரும் அவர்களின் நினைவுகளின் மீதும், நாம் கொண்டிருக்கும் தமிழின விடுதலை நம்பிக்கை மீதும் சபதம் செய்வோம்.

**01.** சிங்கள பௌத்தமயமாக்கப்படும் தமிழ் தாயகத்தை தடுக்கவும், தமிழ்த் தேசியத்தை நாளாந்த வாழ்வியலாக்கவும்

**02.** தமிழின அழிப்பில் சர்வதேச நீதி வேண்டி அரச பொறுப்பையும் மேற்குலக நாடுகளின் உடந்தை தன்மையையும் வலியுறுத்தி குற்றவாளிகளை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவும்

**03.** தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்கு உரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பாராதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தவும்

**04.** ஈழத்தமிழர் இருப்பின் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட தமிழின அழிப்பை தடுக்கவும்

**05.** தமிழ்த் தேசிய நம்பிக்கையின் உறுதி கொண்டு ஒரு குடையின் கீழ் தமிழின அடக்குமுறைக்கு எதிராக தமிழின விடுதலையை நோக்கி முனைப்புடன் தொடர்ந்து போராட எமது மக்கள் பலத்தை நம்பித் தொடர்ந்து அடிபணியாது போராடுவோம் - என்றுள்ளது. (அ-ம)

## வெள்ளவத்தை...

நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று மாலை நடைபெற்றன. நூற்றுக் கணக்கான மக்கள் இதில் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இதன்போது சிங்கள அமைப்புகளைச் சேர்ந்த பலர் அடாத்தாக அந்தப் பகுதிக்குள் நுழைந்து குழப்பம் ஏற்படுத்தியுள்ளனர்.

நினைவேந்தலில் ஈடுபட்டோரை தகாத வார்த்தைகளால் ஏசியும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒளிப்படத்தை தீயிட்டுக் கொளுத்தியும் அவர்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர். இதையடுத்து பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (அ-ம)

## முள்ளிவாய்க்கால்...

ஏந்துவோம். கடல் கடந்து வாழும் தமிழ்ச் சொந்தங்களின் உரிமைகளுக்காக எப்போதும் துணை நிற்போம். ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட துயரங்கள் மறக்க முடியாதவை. உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் உணர்வுகளுடன் நான் இணைந்துள்ளேன் - என்றுள்ளது. (அ-ம)

## பொலிஸ்...

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மயங்கி வீழ்ந்தவரை உடனடியாக மீட்டு போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## பரராஜசேகரப்...

வுள்ளது. இன்று காலை 7.05 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து திருநடனத்துடன் சுவாமி உள்வீதி உலா வந்து சித்திரத் தேரில் ஆரோகணிப்பார். அதனைத் தொடர்ந்து சித்திரத் தேர் வீதி உலா ஆரம்பமாகும். (அ-ம-66)

## ஆளுநரின்...

விருந்த விசாரணையை இரத்துச் செய்யக்கோரி கடந்த மாதம் 27ஆம் திகதி இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதற்கமைய மனுதாரர்களின் ஆரம்பச் சமர்ப்பணங்களை ஏற்று நீதிமன்றால் இடைக்காலத் தடைக் கட்டளையும் வழங்கப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து, வடமாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் சார்பில் முன்னிலையான சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி புவனேந்திரராஜா ஜனந்தன், கடந்த 11ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் வலுவான சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தார். இத்தகைய எழுத்தாணை வழக்குகள் அனுமதிக்கப்படுவது அரச இயந்திரத்தின் செயற்பாட்டை முடக்கும் எனவும், மக்கள் பிரதிநிதிகளே என்றாலும் அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டு முடிவுக்கு வர வேண்டுமே தவிர, அவை விசாரணையின் முன்னரே தடுக்கப்படக்கூடாது எனவும் அவர் மன்றில் வாதிட்டார். அத்துடன் மனுதாரர் நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தியுள்ளமை தொடர்பிலும் அவர் தனது ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

இந்த வழக்குகளின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. இதன்படி, மனுதாரர்களால் பெறப்பட்ட இடைக்காலத் தடைக் கட்டளையை நீதிமன்றம் ரத்துச் செய்தது. அத்துடன் ஆளுநரின் விசாரணையை முன்னெடுப்பதற்கு ஏதுவாக இரண்டு வழக்குகளையும் முழுமையாகத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. (அ-ம-26)

## விமலின்...

ஏற்பட்டது. விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதை பத்தரமுல்லையில் உள்ள தேசிய போர்வீரர்கள் நினைவிடத்தில் கொண்டாடுவதற்கு விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி நேற்று ஏற்பாடு செய்திருந்தது. எனினும், அவர்கள் அந்த வளாகத்துக்குள் நுழைவதற்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர். இதையடுத்து, பொலிஸாருடன் வீரவன்ஸ தரப்பினர் கடும் குழப்பத்தில் ஈடுபட்டனர். எனினும், வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபடுவதற்கு பொலிஸார் இறுதிவரை அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



### தேசிய மட்ட நாடகப் போட்டி

# மன்.சித்திவிநாயகர் இந்துவுக்கு 12 தேசிய விருதுகள்

**மன்னார், மே 19**

**இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான நாடகப்போட்டியில், மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரிக்கு 12 தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.**

இதன்படி, பிரளயம் நெடுநாடகம் முதலாமிடத்தைப் பெற்றுள்ளதுடன், சிறந்த இசையமைப்பு (குறுநாடகம் உண்மைத்தரிசனம்), சிறந்த இசையமைப்பு (நெடுநாடகம் பிரளயம்), ஒப்பனை (நெடுநாடகம் பிரளயம்), வேட உடை (நெடுநாடகம் பிரளயம்) அசைவியக்கம் (நெடுநாடகம் பிரளயம்), சிறந்த நடிகர் (நெடுநாடகம் பிரளயம்), சிறந்த துணை நடிகர் (நெடுநாடகம் பிரளயம்) அரங்க வடிவமைப்பு (நெடுநாடகம் பிரளயம்) சிறந்த ஒப்பனை (குறுநாடகம் உண்மைத்தரிசனம்), சிறந்த நெறியாள்கை (நெடுநாடகம் பிரளயம்), சிறந்த நாடகப்பிரதி 3ஆம் இடம் (நெடுநாடகம்பிரளயம்), வருடத்தின் சிறந்த நாடகத் தயாரிப்பு (நெடுநாடகம் பிரளயம்) ஆகியவற்றுக்கு இந்த விருதுள் கிடைக்கப்பெற்றுள்ளன. (க-213-பி)

### சட்டவிரோதமாக

# மோ.சைக்கிள் இறக்குமதி சி.ஐ.டி.யால் ஒருவர் கைது!

கொழும்பு, மே 19

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர், குற்றப்புலனாய்வுப் பணியகத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எவ்வித அனுமதிப்பத்திரமும் இன்றி வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 2 மோட்டார் சைக்கிள்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என்று பணியகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-இ)

# தண்டவாள ஆணியைக் கழற்றியவர் கைது!

கொழும்பு, மே 19

வன வாசலாவுக்கு அருகில் நேற்றுமுன்தினம் ரயில் தடம்புரண்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ரயில் பாதை மாற்றியிலிருந்து உலோகக் கூறுகளை அகற்றியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தத் தகடுகள் அகற்றப்பட்டதாலேயே விபத்துச் சம்பவித்ததாக பொலிஸார் கூறியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையானவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)

# மரண அறிவித்தல்



## கந்தையா இரவீந்திரன்

(B.Sc, Chartered Accountant,
Spartan Prints Limited and ASR Associates உரிமையாளர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு கந்தையா இரவீந்திரன் அவர்கள் நேற்று (18.05.2026) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற ராஜதுரை - சிவலோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சசிதரியின் (உரும்பிராய்) அன்பு கணவரும், சுதர்ஷனா (London), பிரியதர்ஷனா (Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், உமா ராணி, நரேந்திரன், சுசீந்திரன், நந்தினி, கமலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரவீந்திரநாத், ஞானகுமரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வினி விதுஷன், பிரணவி,சாத்வி ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.05.2026) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3:00 மணி தொடக்கம் 30/2 Mayfield Road. Kotahena, Colombo 13 என்ற முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். ஈமக்கிரியைகள் நாளை (20.05.2026) புதன்கிழமை முற்பகல் 10.45 தொடக்கம் மதியம் 12.00 வரை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்**
**18.11.1942**

**மறைவு**
**18.05.2026**

தொடர்புகளுக்கு:
சுதர்ஷனா (சுதா ) - +447948617225
பிரியதர்ஷனா (பிரியா) - +94776098321

தகவல் :
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.